**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - මාර්තු 2025**
**கலைத்தேர்வுப் பரீட்சை) வெளிவாரி-புதிய பாடத்திட்டம் (300 வது தேர்ச்சி மட்டம் – மாசி- பங்குனி 2025**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February – March 2025**

# SUPE 310: செயற்றிட்ட உருவாக்கமும் மதிப்பீடும்
# (Project Formulation and Evaluation)

**Instructions/ அறிவுறுத்தல்கள்**

**நேரம்: மூன்று (03 மணித்தியாலங்கள்**

Time: three **(03)** Hours.

**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**

Marks will be deducted for illegible handwriting.

**04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
Answer **04** questions only.

**இந்த வினாப்பத்திரத்தில் 06 வினாக்கள் உள்ளன.**
There are 06 questions in the question paper.

Calculators are allowed.
கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

---

1 a) செயற்றிட்ட உருவாக்கத்திலுள்ள செயற்றிட்ட யோசனைகள் / எண்ணக் கருக்களின் பல்வேறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு முதலீட்டு / அபிவிருத்தி செயற்றிட்டத்தின் செயற்றிட்ட எண்ணக்கரு / யோசனையினை வடிவமைப்பதன் முக்கியத்துவத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

b) நீங்கள் ஒரு செயற்றிட்ட வடிவமைப்பாளராக இருந்தால், உமது செயற் திட்டத்தினை வடிவமைக்க பல்வேறு செயற்றிட்ட அடையாளப்படுத்தல் அணுகுமுறைகளை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதுடன் செயற்றிட்ட திட்டமிடல் செயல்பாட்டின்போது எந்தெந்த பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்? மூலதன உருவாக்கத்தின் பற்றாக்குறை மற்றும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உமது விடையை விளக்குக. (15 புள்ளிகள்)

2. கண்டி நகரப் பகுதியின் திண்மக்கழிவு முகாமைத்துவம் அரசாங்கத்தால் பாரிய சுற்றுச்சூழல் பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது நகரத்தின் பொருளாதாரம், சமூகம் மற்றும் சர்வதேச நற்பெயரை பாரிய அளவில் பாதிக்கும் என்பதால் நகரத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவ பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக ஒரு செயற்றிட்டத்தை வடிவமைக்க பொறுப்பான அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு நீங்கள் ஓர் செயற்றிட்ட வடிவமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுக,

a) மேற்கூறப்பட்ட பிரச்சினைக்கான பிரச்சினை மரம் (problem tree) மற்றும் நோக்க மரத்தை (objective tree) அதன் கூறுகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான இடைத்தொடர்புகளைக் குறிப்பிட்டுப் பெறுக. (12 புள்ளிகள்)

b) மேலேயுள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாற்றுத் தந்திரோபாயங்களை வழங்குவதுடன் ஒவ்வொரு தந்திரோபாயத் தினையும் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

c) இந்தச் செயற்றிட்டத்தின்மீது ஆர்வமுள்ள பங்குதாரர்களின் வெவ்வேறு வகைகளைக் கண்டறிந்து அவர்களின் வகிபாகம், தாக்கம் மற்றும் தலையீட்டு இயலுமை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் பங்குதாரர் பகுப்பாய்வு அட்டவணையைத் தயாரிக்குக. (07 புள்ளிகள்)

3. a) தர்க்கச் சட்டக செயன்முறையின் (Logical Framework process) ஒவ்வொரு துணைப் பகுப்பாய்விலும் கவனம் செலுத்தும் அனைத்து படிமுறைகள் தொடர்பாகவும் விரிவான விளக்கங்களை பட்டியலிட்டு வழங்கவும். (12 புள்ளிகள்)

b) ஒரு தர்க்கச் சட்டக தாய (Logical Framework Matrix) வரைபடத்தை உருவாக்கி, அதன் ஒவ்வொரு கூறுகளையும் குறிப்பிடுக (அபிவிருத்தி நோக்கம், செயற்றிட்ட நோக்கம், வெளியீடுகள், செயற்பாடுகள், உள்ளீடு கள், சரிபார்க்கக்கூடிய குறிகாட்டிகள், தகவல்களுக்கான மூலங்கள் மற்றும் தொடர்புடைய இடர்களும் எடுகோள்களும்). (13 புள்ளிகள்)

4. a) ஒரு முதலீட்டு செயற்றிட்டத்தின் அனைத்து எதிர்கால உட்பாய்ச்சல் களையும் வெளிப்பாய்ச்சல்களையும் ஏன் நாம் கழிவீடு செய்கிறோம்? செயற்றிட்டப் பகுப்பாய்வில் முதலீட்டுச் செலவை ஏன் நாம் கழிவீடு செய்யக்கூடாது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

b) "தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV) என்பது முதலீட்டின் அளவைக் குறிக்கும் ஒரு குறிகாட்டி ஆகும். அதேவேளை உள்ளார்ந்த திரும்பல் விகிதம் (IRR) என்பது முதலீட்டின் வினைத்திறன் மற்றும் தரம் அல்லது முதலீட்டின் விளைவின் குறிகாட்டி ஆகும்" NPV மற்றும் IRR என்பவற்றின் பலம் மற்றும் பலவீனங்களைக் குறிப்பிட்டு இக் கூற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

c) NPV மற்றும் கழிவீட்டு விகிதம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை வரைபட ரீதியாக விளக்குக. உமது வரைபடத்தில் வருமானம் செலவு சமப்படும் புள்ளியைத் (break-even point) தெளிவாக குறிப்பிட்டு, ஒரு தனியார்துறை முயற்சியாளர் வியாபாரத்தைத் திட்டமிடு வதில் வருமானம் செலவு சமப்படும் புள்ளியின் முக்கியத்துவத்தை விளக்குக. (09 புள்ளிகள்)

5 a) "ஒரு புதிய முதலீட்டு செயற்றிட்டத்தை மதிப்பிடும் கட்டத்தில் விரிவான செலவு-நன்மைப் பகுப்பாய்வில் சமூகத் தாக்க மதிப்பீடு (SIA) மற்றும் சூழல் தாக்க மதிப்பீடு (EIA) ஆகியன அத்தியாவசிய பகுப்பாய்வுகள் ஆகும்". இலங்கையின் அரசியல் மற்றும் சமூக பொருளாதார பின்னணியைக் கருத்திற்கொண்டு இக் கூற்றை விளக்குக. (13 புள்ளிகள்)

b) பொருத்தமான உதாரணங்களை வழங்கி, குறைந்த பட்சம் 4 நிழல் விலையிடல் (shadow price) கணிப்பீட்டு நுட்பங்களை விளக்குக. (12 புள்ளிகள்)

6. a) ஒரு முடிக்கப்பட்ட செயற்றிட்டம்/ திட்டத்தின் தாக்க மதிப்பீடு (impact evaluation) / பின் மதிப்பீட்டின் (post-evaluation) பகுப்பாய்வு வகைகளை விளக்குக. (13 புள்ளிகள்)

b) முதலீட்டு செயற்றிட்டங்கள் (projects) மற்றும் திட்டங்களைக் (programs) கண்காணிக்கப் பயன்படுத்தக்கூடிய முறைகள் (methods) மற்றும் கருவிகள் (tools) குறித்து விளக்குக. (12 புள்ளிகள்)